# நடப்பு நிகழ்வுகள்- ஏப்ரல் 07 - 2018

❖ **உலக சுகாதார தினம்** (World Health Day) - ஏப்ரல் 7.
2018ஆம் ஆண்டின் உலக சுகாதார தின கருப்பொருள்: Universal Health Coverage என்பதாகும்.

❖ சவதேச ருவாண்டோ இனப்படுகொலை பிரதிபலிப்பு தினம் (International Day of Reflection on the Genocide in Rwanda) - ஏப்ரல் 7.

❖ தமிழக அரசின் வேளாண் துறையின் செயல்பாடுகள், தகவல்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு விரைவில் சென்றடைய **"உழவன்"** என்ற அலைபேசி **செயலி** தமிழ், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை ஆண்ட்ராய்டு அலைபேசியில் பதிவிரக்கம் செய்து கொள்ளலாம். அரசின் வேளாண் மானியத் திட்டங்கள், பயிர் காப்பீடு, உரம், விதை இருப்பு அறிதல், வேளாண் இயந்திரங்களின் வாடகை மையங்கள், விளை பொருட்களின் சந்தை விலை, வானிலை அடிப்படையில் வேளாண் அறிவுரை பெறுதல் போன்றவற்றை இந்த செயலியின் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

❖ அரசுப் பள்ளிகளில் முதன் முறையாக கணினியில் பொதுத் தேர்வு ராமநாதபுரத்தில் நடைபெற்றது. ராமநாதபுரம் மாவட்டத்தில் பத்து தொடக்க நடுநிலைப்பள்ளிகளைச் சேர்ந்த 350 மாணவர்கள் இந்த புதிய முறையில் தேர்வு எழுதினர்.

❖ **அம்மா வை.ஃ.பை** திட்டம் முதற்கட்டமாக சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள உழைப்பாளர் சிலை, கோவை காந்திபுரம் பேருந்து நிலையம், மதுரை மாட்டுத் தாவணி எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 05.04.18 அன்று தொடங்கி வைத்தார். இந்த மணடலங்களில் நபருக்கு ஒரு நாளைக்கு 20 நிமிடம் இணைய வசதி சேவை இலவசமாக வழங்கப்படும். அதன் பின் பயன்படுத்தப்படும் சேவைக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ10 வீதம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தராக சி.பாலசந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

- தமிழ்நாடு டிஜிட்டல் நூலக இணையதளத்தை (www.tndigitallibrary.ac.in) முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் 05.04.18 அன்று தொடங்கி வைத்தார். இந்த இணையதளத்தின் மூலம், மின் நூல்கள், மின் இதழ்கள், ஒளிப்படங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆகியவற்றை மாணவர்கள் பதிவிரக்கம் செய்து கொள்ளலாம்.

- 11-வது உலக இந்தி மொழி மாநாடு 2018 ஆகஸ்ட் 2018 தேதிகளில் மௌரீசியஸ் நாட்டில் நடைபெறவுள்ளது. முதல் இந்தி மாநாடு 1975 ஜனவரியில் மஹாதராஷ்டிரா மாநிலம் நாக்பூர் நகரில் நடைபெற்றது.

- ஆஸ்திரேலியாவின் கோல்டு கோஸ்ட் நகரில் நடைபெற்று வரும் 21வது காமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகளில் பளுதூக்குதல் ஆண்கள் 69கி.கி பிரிவில் ஹரியானாவைச் சேர்ந்த இளம் வீரர் தீபக் லாதர் (வயது 18) வெண்கலப் பதக்கம் வென்றார்.

- மேற்கு ஆப்பிரிக்க நாடான சியோரா லியோனிக் குடியரசின் புதிய அதிபராக ஜுலியஸ் மாடபயோ (Julius Maada Bio) ஏப்ரல் 4 அன்று தலைநகர் ஃப்ரீடவுனில் பதவியேற்றுக் கொண்டார்.

- உள்நாடு மற்றும் உலகப் பொருளாதாரத்துடன் விலைவான மற்றும் விரிவான ஒருங்கிணைப்புக்கு வர்த்தகத்தை பயன்படுத்துவதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு ஏப்ரல் 5, 6 தேதிகளில் புது டில்லியில் உலக மக்கள் மற்றும் பொருள் போக்குவரத்து உச்சிமாநாடு (Global Logistics Summit) நடைபெற்றது.

- செர்பிய குடியரசுக்கான இந்தியாவின் அடுத்த தூதராக சுப்ரதா பட்டாச்சார்ஜி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்சமயம் வெளியுறவு அமைச்சகத்தின் இணை செயலராக பணியிலுள்ளார்.

- மத்திய நிலக்கரித்துறை மற்றும் இரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல், நிலக்கரியின் தரத்தை கண்காணிப்பதற்கான UTTAM (Unlocking Transparency by Third Party Assessment of Mined Coal – uttam.coalindia.in) எனும் செயலியை தொடங்கி வைத்தார்.

OXFORD IAS ACADEMY